
# நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய, மாத இதழ்)



திருமணங்கள் நடந்திடவும் பிள்ளைப் பேற்றைச்
சிறப்பாகப் பெற்றிடவும் அருள் புரிந்தே
கருகாவூர்த் திருத்தலத்தில் கருணை காட்டும்
கருக்காத்த நாயகியைக் கருதி வாழ்வாம்.

செப்டம்பர் 1990



சிவமயம்

# நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 9

ஒலி 8

பிரமோதூத ஆவணி

செப்டம் 1990

பழகவல்ல சிறுத்தொண்டர் பாவின்னிசைக்
குழகரென்று குழையா வழையா வரும்
கழல்கொள்பாட லுடையார் கருகாவூரெம்
அழகர்வண்ணம் அழலும் அழல்வண்ணமே.

— திருஞானசம்பந்தர்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

தொலைபேசி: p. p. 26668

ஆண்டுச் சந்தா ரூ. 24-00

டெபாசிட் சந்தா ரூ. 200-00

## வி. என். சிடி. க்கு நகரத்தார் சிறப்பு விருது!

சென்னை நகரத்தார் பண்பாட்டுக் கழகம் சார்பாக சென்னை ராணி சிதை அரங்கத்தில் 22-8-90 அன்று நடைபெற்ற விழாவில் நமது இதழின் ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கு நகரத்தார் சிறப்பு விருது (Nagarathar Best Award) வழங்கப் பெற்றது. மேற்படி விருதினை சென்னை பாட்டிலிங் நிறுவன மார்க்கெட்டிங் மேலாளர் திரு. கே ஆர் மெய்யப்பன் வழங்கினர். முனைவர் திரு. மெ. சுந்தரம் வரவேற்க நாடகப் பாதுகாவலர் திரு. என். கே. டி. முத்து வாழ்த்திப் பேச பொதுச் செயலாளர் திரு. எம். அழகப்பன் நன்றி கூறினர். ஆர். ஜி. கண்ணன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியோடு விழா இனிது முடிந்தது.

## கட்டிட நிதிக்குக் கலை விழா

சென்னையில் கட்டப்பட இருக்கும் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோவில் கட்டிட நிதிக்காக 19-8-90 மாலை பெரம்பூரில் திரைப்படத் தயாரிப்பாளர் திரு. ஜீ. வி தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் திரு. செங்கைசிவம் முன்னிலையில் கலை விழா நடைபெற்றது. திரு வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர்கள். மற்றும் முனைவர் திரு. மெ. சுந்தரம், தொழிலதிபர் திரு. வி. ஜி. சந்தோஷம், திரைப்பட நடிகர் திரு எஸ். வி. சேகர் திரைப்பட நடிகை ஜெயச்சித்ரா ஆகியோரும் வாழ்த்திப் பேசினர்கள். ஜார்ஜ் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

## நகரத்தார் யார்? எவர்? கையேடு!

பள்ளத்தூரைச் சேர்ந்த திரு. பழ. அண்ணாமலை அவர்கள் "நகரத்தார் யார்? எவர்?" என்ற பெயரில் நகரத்தார்களைப் பற்றிய முழு விவரங்களடங்கிய ஒரு கையேட்டினைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். இந்தக் கையேட்டை டிசம்பர் '90 க்குள் வெளியிடும் திட்டத்தில் பணிகள் முடுக்கிவிடப் பட்டுள்ளன. அதற்காகப் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பத்தாயிரம் நகரத்தார் பெருமக்களுக்கும் அவர்கள் வினக்கள் அடங்கிய ஒரு படிவத்தினை அனுப்பி வருகிறார்கள். படிவம் கிடைக்கப் பெறாதவர்கள் திரு. பழ. அண்ணாமலை அவர்கள், Flat B.1, 8 நைனியப்பன் தெரு மண்ணடி, சென்னை - 600 001 என்ற முகவரிக்கு எழுதிப் பெற்று விரைவில் தங்களைப் பற்றிய விவரங்களை எழுதி அனுப்ப வேண்டுகிறார்கள். அவர்களது புதுமையான பயனுள்ள முயற்சிக்கு ஆதரவு அளிப்பது ஒவ்வொரு நகரத்தாருடைய கடமையாகும்.

## வி.என்.சிடி. வள்ளியப்பன் அமெரிக்கா பயணம்

நமது இதழின் ஆசிரியர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களின் மூத்த புதல்வர் திரு. வி. என். சிடி. வள்ளியப்பன் 16-8-90 அன்று சென்னையிலிருந்து விமானம் மூலம் அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

மதுரையிலிருந்து 14-8-90 அன்று இரவு இரயிலில் சென்னை புறப்பட்டுச் சென்ற அவரை மதுரை நகரத்தார் சங்கத்தின் துணைத் தலைவர் கலைமகள் திரு. இராம. நடராஜன் செட்டியார் செயலாளர் திரு. எம். சிஎன். மாணிக்கம் நமது இதழின் துணை ஆசிரியர் திரு. எல். சுந்தரம் மற்றும் நண்பர்கள் மாலை அணிவித்து வழியனுப்பி வைத்தனர்.




சென்னை கோடம்பாக்கம் கமலா தியேட்டர் காம்ப்ளெக்ஸில் கமலா ரெஸ்டாரெண்ட் கட்டிடத்திற்கு 3-8-90 அன்று அடிக்கல் நாட்டு விழா நடந்தபோது எடுத்த படம். படத்தில், அடிக்கல் நாட்டிய இந்தியன் வங்கியின் தலைவர் திரு. எம். கோபாலகிருஷ்ணன் சிறப்பு விருந்தினர்கள் - மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி, முன்னாள் தலைவர் திரு. எல். கிருஷ்ணன் - இடது புறம் திருமதி கமலா சிதம்பரம், திரு. வி. என். சிடி. ஆகியோரைக் காணலாம்.

---

## அட்டைப் படம்

இந்த இதழ் அட்டைப் படத்தை அலங்கரிப்பது அருள்மிகு கருகாத்தநாயகி (ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகை) ஆகும்.

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் திருக்கருகவூரில் காவிரி நதியின் கிளை நதியான வெட்டாற்றங் கரையில் அமைந்திருப்பது அருள்மிகு முல்லை வன நாதர் திருக்கோயிலாகும். இங்குள்ள இறைவன் அருள்மிகு முல்லைவன நாதர் என்றும் இறைவி அருள்மிகு கருகாத்தநாயகி (ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகை) என்றும் அழைக்கப்பெறுகின்றது.

தஞ்சாவூரிலிருந்து கிழக்கே 20 கி. மீ. தொலைவிலும் கும்பகோணத்திலிருந்து தென் மேற்கே 20 கி. மீ. தொலைவிலும் இத் திருக்கோயில் அமைந்துள்ளது.

திருமணம் கூடிவராத கன்னியர்களும் பல ஆண்டுகளாகக் குழந்தைப்பேறு இல்லாத பெண்களும் இக் கோயிலுக்கு நேரில் வந்து அம்மன் சன்னதியை சிறிது நெய்யில் மெழுகிக் கோலமிட்டு அர்ச்சனை செய்து வழிபட்டால் விரைவில் திருமணம் நடைபெறுமென்றும் விரைவில் மகப்பேறு உண்டாகுமென்றும் நம்பப் பெறுகிறது.

திருமணமாகிப் பல ஆண்டுகளாகியும் குழந்தை இல்லாதவர்களுக்கு ஸ்ரீ கருகாத்த நாயகியின் திருப்பாதத்தில் வைத்து மந்திரித்துக் கொடுக்கப்பெறும் நெய்யைக் கணவனும் மனைவியுல் 48 நாட்கள் தொடர்ந்து இரவில் சிறிதளவு சாப்பிட்டு வந்தால் விரைவில் கருத்தரிக்கும் என்றும் நம்பப் பெறுகிறது.

அட்டைப்படம் அன்பளிப்பு:
திரு. கும. வள்ளியப்பன்
பலவான்குடி.

# லெ. அழகு சுந்தரம் செட்டியார்

பார்த்தால் பெரியவர்; பேசினால் இளையவர்; சிரித்தால் குழந்தை. ஆம் அவர்கள்தான் காலஞ்சென்ற லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள்.

கண்டரமாணிக்கம் செ. சி. நா. லெட்சுமணன் செட்டியார் அவர்களது மூத்த புதல்வரான இவர்கள், இலங்கையில் கல்லூரிக் கல்விவரை பயின்று Solicitor பட்டம் பெற்று அங்கு 1942 வரை Solicitor ஆகத் தொழில் செய்தவர்கள்.

மதுரை, பசுமலை மகாலெட்சுமி நூற்பாலையின் நிர்வாக இயக்குநராக 45 ஆண்டுக்காலம் இருந்து அதை நிர்வகித்தவர்கள்.



மதுரை தமிழிசைச் சங்கம், மதுரை நகரத்தார் சங்கம் ஆகியவற்றின் தலைவராக இருந்து அவற்றின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டவர்கள்.

1981ல் காரைக்குடியில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நகரத்தார் நல உரிமை மாநாட்டின் தலைவராக இருந்து தம் வயதைப் பாராமல் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று வந்து அம் மாநாட்டை வெற்றிகரமாக நடத்த உதவியவர்கள்.

காஞ்சி ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலின் திருப்பணிக் குழுத் தலைவராக இருந்து ஆன்மீகப்பணியாற்றியவர்கள்.

"நகரத்தார் குரல்" இதழின் கௌரவ ஆசிரியராக இருந்து அவ்வப்போது நல்ல பல ஆலோசனைகளை வழங்கியவர்கள்.

மதுரையின் பொது வாழ்க்கையில் நாற்பதாண்டுக்காலம் தம்மை இணைத்துக் கொண்டவர்கள். பலருக்கு வழிகாட்டியாக இருந்தவர்கள். நன்மை செய்வதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள். நகரத்தார் பெருமக்கள் எல்லா வகையாலும் முன்னேற வேண்டும் என்ற பேரவா கொண்டவர்கள்.

(திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்களின் நினைவு நாளை (20-9-90) ஒட்டி இக்கட்டுரை வெளியிடப் பெறுகிறது.)

---

## பரங்குன்றத்திற்கு பால்குடம், காவடி

ஆவணிக் கார்த்திகையை முன்னிட்டு ஆவணி மீ 24 உ (9-9-90) ஞாயிறு மாலை மதுரை நகர விடுதியில் காவடிகள் கட்டி இரவு 7 மணி அளவில் அரோஹராச் செய்யப்படுமென்றும் மறுநாள் 25 உ (10-9-90) திங்கள் காலை 5-30 மணிக்கு பால்குடங்கள் கட்டி 7-30 மணியளவில் புறப்பட்டு 10-30 மணியளவில் திருப்பரங்குன்றம் சென்று முருகனுக்கு காவடிகள் செலுத்தப் பெறுமென்றும் திருப்பரங்குன்றம் நகர விடுதியில் அன்று பகல் 12 மணி அளவில் மகேஸ்வர பூஜை நடைபெறும் என்று அறிவிக்கப் பெற்றுள்ளது.

# சைவமும் தமிழும்

எல்லா மதங்களும் இறைவனைச் சென்று சேருகின்றன. எல்லா ஆறுகளும் கடலோடு கலக்கின்றன. பொன் கொழிக்கும் பொன்னி எனப்படும் காவிரி ஆறு கடலோடு கலக்குமிடம் இந்தக் காவிரிப் பூம்பட்டினம்.

வெள்ளிக் கதவு போட்ட வீடுகளில் தங்கத்தால் கதவு போட்டு வாழ்ந்த தனவணிகப் பெருமக்கள் திரைகடலோடித் திரவியம் தேடிய இடம் இந்தப் பட்டினம்.

மண் பானைகளில் சோறு வடித்தால் பற்று ஒட்டியிருக்கும். ஆனால் இந்தப் பகுதி மண் பானைகளில் பற்று ஒட்டாது. அவை பற்றற்றவை பட்டினத்தார் வாழ்ந்த மண் அல்லவா? அவரைப் போலவே இந்த மண் பானைகளும் பற்றில்லாதவை.

சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாட்டுக்குச் சென்றதாலேயே நமக்குச் சோழநாட்டுச் சைவத்திலும் பாண்டிய நாட்டுத் தமிழிலும் ஈடுபாடு உண்டாயிற்று.

— கலைமகள் இராம. நடராஜன் செட்டியார்

*(பட்டினத்தடிகள் திருவிழாவில் சாப்பாட்டுக் கூடத் திறப்பு விழாவில்.)*

## மதுரையில் நகரத்தார் கையேடு!

மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் 8-8-90 அன்று மாலையில் அதன் தலைவர் திரு. இரா. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மதுரையில் வாழும் நகரத்தார்களின் முகவரிகள் அடங்கிய "மதுரையில் நகரத்தார் கையேடு 1991". வெளியிடுவது எனத் தீர்மானிக்கப்பெற்றது. இதற்கு மதுரையில் வாழும் நகரத்தார்கள், தங்கள் பெயர், மனைவியின் பெயர், சொந்த ஊர், கோவில், தொழில், பிள்ளைகளின் பெயர் அவர்களுடைய வயது கல்வித் தகுதி ஆகியவற்றை எழுதி நகரத்தார் இளைஞர் சங்கம் 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625 001 என்ற முகவரிக்கு 15-9-90க்குள் அனுப்புமாறு அதன் செயலாளர் வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கெனப் படிவம் உள்ளது என்றும் கிடைக்கப் பெறுதவர்கள் தனித் தாளில் முழு விவரங்களுடன் எழுதி அனுப்பலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

மதுரை நகரத்தார் இளைஞர் சங்கம் 1986ல் இது போன்று ஒரு கையேட்டை வெளியிட்டிருக்கிறது.

## திறப்பு விழா

மதுரை தெற்கு மாசி வீதியில் கோல்டன் ஹவுஸிங் பைனன்ஸ் & இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி லிட். நிறுவனத்தை 19-8-90 அன்று லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. எல். பி பூபதி தலைமையில் திரு. வி என். சிடி. நாகப்பன் திறந்து வைத்தார்.

# உண்ணு விரதம் எதற்காக?

ஆர். சொக்கலிங்கம்
(தலைவர், நகரத்தார் இளைஞர் சங்கம், மதுரை)

நகரத்தார் சமூகத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரி மதுரை நகரத்தார் இளைஞர் சங்கம் மிகக் குறுகிய கால அளவில் ஏற்பாடு செய்திருந்த உண்ணுவிரதப் போராட்டம் குறிப்பிட்டபடி 27-7-90 அன்று மதுரை மத்தியப் பேருந்து நிலையம் முன்பு வெற்றிகரமாக நடைபெற்றது. எங்கள் இளைஞர் சங்கத்தின் புதிய நிர்வாகக் குழு பொறுப்பேற்ற சில தினங்களுக்குள்ளே எழுச்சியூட்டும் வகையில் அந்த உண்ணுவிரதப் போராட்டம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

போராடுவது, உண்ணுவிரதம் இருப்பது அரசினரிடம் - ஆளும் கட்சியினரிடம் நமது கோரிக்கைகளை வலியுறுத்துவதெல்லாம் இந்தியக் குடிமக்களின் சாதாரண உரிமைதான். கோரிக்கைகளைப் பரிசீலித்து (அரசியல் ஆதாயம் தேடாத வகையில்) நியாயமான, அவசியமான உரிமைகள் வழங்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்வது அரசின் கடமையாகும். அரசை எதிர்த்தோ ஆளும் கட்சியை எதிர்த்தோ நமது உண்ணுவிரதம் இல்லை என்பதை நாங்கள் செய்தித் தாள்கள் வாயிலாகத் தெரிவித்திருக்கிறோம்.

நகரத்தார் சமூகத்தின், அன்றைய பொருளாதார நிலை, வெளிநாடுகள் நன்றாக இருந்தபோது - நன்றாக இருந்தது. அந்தக் காலத்தில் நகரத்தாா்களுக்கு கல்வி அறிவு அவ்வளவு அவசியமாகத் தேவைப் படவில்லை. ஆனால் இன்றைய நிலைவேறு. இன்று கல்வியும் அரசு வேலைகளும் நம்மினத்திற்கு அடிப்படைத் தேவைகளாக இருக்கின்றன. கோடிக்கணக்கில் - இலட்சக் கணக்கில் பணத்தை வைத்துக்கொண்டு அவற்றை என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கும் பலர் இன்று பிற்பட்டவர்கள் பட்டியலில், மிகவும் பிற்பட்டவர்கள் பட்டியலில் இருந்துகொண்டு அரசினரின் சலுகைகளைப் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். ஆனால் உண்மையிலேயே பொருளாதாரத்தில், கல்வியில், அரசு



திரு. ஆர். சொக்கலிங்கம்

வேலைவாய்ப்பில் நலிந்த நிலையில் உள்ள நாம் முற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்து கொண்டு பெரும் தொல்லைகளை அனுபவித்து வருகிறோம்.

நம்மவர்கள் இலட்சக் கணக்கில் பணம் நன்கொடையளித்து ஏற்படுத்திய கல்லூரிகளில் கூட நம்மினத்து இளைஞர்கள் விரும்பிய கல்வியைப் பெற முடியாத அவல நிலை உள்ளது.

நம்மினத்தில் ஒருசிலர் பெரிய



மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தினர் 27—7—90 அன்று மதுரையில் நடத்திய உண்ணுவிரதப் போராட்டத்தில் நமது இதழின் ஆசிரியர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள். பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம், தாலாட்டுக் கவிஞர் திரு. T. குமரப்பன் ஆகியோர் பேசும் காட்சிகள்.

தொழிலதிபர்களாக - செல்வந்தர்களாக இருக்கிறார்கள். அது உண்மை. (இதுபோல் எல்லா இனங்களிலும் இருக்கவே செய்கிறார்கள்) அவர்களைப் பார்த்து விட்டு நகரத்தார்கள் எல்லோருமே படித்தவர்கள், செல்வந்தர்கள் என்று எண்ணினால் அது தவறு. கோட்டைபோல் இருந்த வீடுகளை இடித்து விற்று விட்டு அன்றாடம் சாப்பாட்டிற்கே பரிதவிக்கும் குடும்பங்கள் செட்டிநாட்டில் ஏராளம், ஏராளம். பாழாய்ப்போன கௌரவத்தைக் கட்டிக்காக்க பலர் தங்களது வறுமை நிலையை - அவல நிலையை நம்மிடம் கூட சொல்லத் தயங்குகிறார்கள். அன்றாடச்சோற்றுக்கே அல்லற்படும் அவர்களால் கல்வி. திருமணம் போன்ற பெரும் செலவுகளை எப்படிச் சமாளிக்க முடியும்?

நமது சமூகத்தின் மொத்த மக்கள் தொகை ஒரு இலட்சத்திற்கும் குறைவாகவே உள்ளது. எனவே நம்மைப் பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் சேர்ப்பதால் அரசுக்கோ மற்ற இனத்தவர்களுக்கோ எந்தப் பிரச்னையும் எழாது. நமது கோரிக்கை நியாயமானது என்றே அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் எடுத்துரைத்தார்கள்.

நாங்கள் சொல்லைவிடச் செயலுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். எங்களது முயற்சிகளுக்கு இளைஞர் படையும், செயலாற்றல் மிக்க நகரத்தார் பெருமக்களும் கல்வித் துறையில் சீரிய பணியாற்றிவரும் பேராசிரியப் பெருமக்களும் துணை நிற்கும் போது நமது கோரிக்கை வெற்றி பெறும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

போராட்டத்தின் அடுத்த கட்டம் அரசினரின் பதிலை எதிர் நோக்கியுள்ளது. தமிழக முதல்வர் கலைஞர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்களை ஒரு குழுவாகச் சென்று நேரில் சந்திக்க ஏற்பாடு செய்து வருகிறோம். அப்படியும் பலன் இல்லை என்றால் போராட்டம் தொடரும். முக்கிய நகரங்களில் இரண்டாவது கட்டப் போராட்டமும் தமிழகத்தின் தலைநகரான சென்னையில் மூன்றாவது கட்டப் போராட்டமும் நடைபெறும். நாங்கள் எடுத்த முயற்சியை முடிக்கும்வரை ஓய மாட்டோம். போராட்டத்திற்கான செயல் வடிவம் அனைவருடனும் கலந்து பேசி முடிவுசெய்யப் பெறும். திருக்குவளை தந்த திருமகனார் ஆளும் தமிழக அரசு நமது நியாயமான கோரிக்கையை விரைவில் நிறைவேற்றும் என்றும் நம்புகிறோம்.

உண்ணாவிரதத்தில் பங்கு கொண்டு அரசின் கவனத்தை நம்மீது திருப்ப எல்லா வகையாலும் உதவி புரிந்த மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றும் நகரத்தார் அமைப்புகளுக்கும் நகரத்தார் பெருமக்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

## காசியின் சிறப்பு

'காசி' என்றால் பிரகாசம் உடையது; ஒளி பொருந்தியது என்று பொருள். ஞான ஒளியை வழங்கி வருவது காசி. தென்னாட்டு மக்களுக்கு முக்கிய புண்ணியத்தலம் காசி; வட நாட்டு மக்களுக்கு முக்கிய புண்ணியத்தலம் இராமேஸ்வரம். முயற்சி, மன உறுதி, பக்குவம் இவை காசிப் பயணத்திற்கு முக்கியமானவை. காசிக்குப் போய்வந்தவர்களைப் பார்த்ததில் காசிக்குப் போய் வந்த புண்ணியம் கிடைத்திருக்கிறது. 24 மணி நேரத்தில் 10 நிமிடங்கள் ஆன்மீகத்திற்கு ஒதுக்குவதில் சிரமமில்லை.

— இரவீந்திர சுவாமிகள்

(துலாவூர் விலக்குச் சாலையில் கட்டுமான வளைவு, பேருந்து நிழற் கூடத் திறப்பு விழாவில் கலாமடம் - பாதரக்குடி சுவாமிகள் பேசியது.)



மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தினர் நடத்திய உண்ணுவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு பேசியவர்கள்: (இடமிருந்து வலமாக) முனைவர் திருமதி சரஸ்வதி இராமநாதன், பேராசிரியைகள் திருமதி சி. எஸ். விசாலாட்சி, திருமதி சுலோசனா சேவுகன் செட்டி.

# 'நானும் ஒரு நகரத்தார்'...

தமிழண்ணல்

## 9. கோயிலைச் சார்ந்து வாழும் குடிமக்கள்

நகரத்தார் மரபு, உலகிலேயே புதுமையானது. 'உங்கள் 'கோத்திரம் என்ன? குடிவழி யாது? பரம்பரை எது?' என வினவினால், நகரத்தாராகப் பிறந்த ஒருவன் ''நான் வயிரவன் கோயில்; பிள்ளையார்பட்டிக் கோயில்; இளையாத்தக்குடிக் கோயில்'' என்று கோயிலை முன் வைத்துச் சொல்லவேண்டியிருக்கிறது. சேர சோழ பாண்டியர்களைப் பற்றித் திருக்குறள் உரையில் பரிமேலழகர் ''படைப்புக் காலந்தொட்டுச் சிறப்புற்று வரும்'' குடிகளென்றார் இங்ஙனம் முழு முதல் இறைவனையே மூலமாகக் கொண்டு, குடிப்பிறப் புணர்த்தும் நகரத்தார்களையும் 'படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவரும் குடிகள்' எனில் மிகையாகுமா?

கோயில் மாலை வந்தே திருமணம் நடைபெறும். அதனைப் பெற்ற திருமணமே அங்கீகாரம் பெற்றதாகும் என்பது மிகச் சிறப்பாகக் குறிப்பிடற்பாலது. கோயிலில் எழுதிவைப்பதே 'பதிவுத் திருமணமும்' ஆகிறது; அங்கிருந்து அனுப்பப் பெறும் மாலைகளை மாற்றிக்கொள்வது, இறைவனின் அங்கீகாரமும் இசைவும் ஆசியும் வாழ்த்துமாகிறது. இளையாத்தக்குடி மணமகன் மாலையை இலுப்பைக்குடி மங்கைக்கும் இலுப்பைக்குடி மங்கையர்க்கரசியின் மாலையை இளையாத்தக்குடிக் கழனிவாசல்

மணாளனுக்குமென மாற்றிக் கொள்வது. திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பதை மட்டுமல்லாமல், சொர்க்கத்தில் அங்கீகரிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுகின்றன என்கிற வரை செல்கிறது. இம் மாலை மாற்றுவதே உண்மையான - உறுதியான 'அங்கீகாரமாக' இருப்பதால், இதனை ஏன் சீர்திருத்தத் திருமணம் என்றும் கூறக் கூடாது. இது நல்லதொரு மரபாக இருப்பதால், இதனை மேலும் வலுப்படுத்தலாம் எனத் தோற்றுகிறது. திருமணமான மணமக்கள் பெற்றோருடன், முதலாண்டிற்குள் இரண்டு 'சப்பந்தி' கோயில்களுக்கும் சென்று, வழிபாடு செய்து வர வேண்டும் என்ற பழக்கத்தை உண்டாக்குவது நல்லது. மணமக்களானபின் தத்தமது கோயில் பற்றிய நினைவு, மறவாமலிருக்க இப் பழக்கம் உதவி செய்யும்.

## ஒன்பது நகரக் கோயில் நிருவாகத்தை நகரத்தார்களே ஏற்கவேண்டும்

'கோயிலைச் சார்ந்து வாழும் குடிமக்கள்' என்பதை மேலும் ஒரு சான்றுகள் வழியும் பார்க்கலாம். ஆண்டுதோறும் தத்தமது கோயிலுக்கு வரி கட்டுவது, திருவிளக்குக் காணிக்கை தருவது கட்டாயமானதொரு வழக்கமாகும். இப்போது பல ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த வசூல் நடைபெறுவதாலும், தொகை பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட அதே அளவு சிறு தொகையாக இருப்பதாலும் யாரும் இதைப்பற்றி அழுத்தமாக எண்ணிப் பார்ப்பதில்லை. மேலும் ஊரிலிருக்கும் அண்ணன் தம்பியர் ஐந்து பத்து வருவதைக் கட்டிவிடுவதால், இப் பழக்கம் பற்றிப் பலருக்குத் தெரியவு மில்லை. மேலும் நம் கோயில்களை, இந்து அறநிலையத்துறை என்ற கோட்டிற்குள் கொண்டு போனதால், அவை செல்விழந்து நிற்கின்றன. நகரத்தார் குலமரபே இதில் ஒட்டிக்கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, இவற்றின் நிருவாகத்தை முழுவதுமாக நகரத்தார்கள் ஏற்க வேண்டும். இதற்கான முயற்சி செய்தால், இச் 'சுதந்திரத்தைப்' பெறுவது ஒன்றும் கடினமன்று. சோழநாட்டிலோ, பாண்டிய நாட்டிலோ ஊர்ப் பொதுவாக இருக்கும் கோயில்கள் வேறு; குலமரபைப் பேணும் ஒன்பது நகரக் கோயில்கள் வேறு. இதைச் சுட்டிக்காட்டினால் அரசு இசைவது கடினமாயிராது.

இவை நம் குலவழியின் முதல் ஊற்றுக் கண்கள் போன்றவை. தலைக் காவிரியில் தோன்றும் ஊற்றுக்கண் போல, நமது குடும்பங்களின் நலமும் வளமும், பெயரும் குறியீடும் அடையாளமும் இவற்றைச் சார்ந்துள்ளன. ஒன்பது நகரக் கோயில்களிலும் பிள்ளையார்பட்டி தான் இன்று நடைமுறை நிருவாகத்தில் தலைமை வகிக்கிறது. இதே நன்னிலை மற்ற எட்டுக் கோயில்களிலும் ஏற்பட வேண்டும். வெறுமனே குடமுழுக்கு நன்னீராட்டை நடத்திவிட்டால் போதாது. நகரத்தார் சங்கங்கள், இளைஞர் சங்கங்கள் யாவும் இதிலும் அக்கறை காட்ட வேண்டும். இந்த நகரக் கோயில்கள் முன்பு நகரத்தார்களின் நீதி மன்றங்களாக விளங்கின. நகரத்தார் தமக்குள் ஏற்படும் பிணக்குகளை இங்கே தான் தீர்த்துக் கொண்டனர். வயிரவன் கோயிலில் இதற்கான தடயங்களை ஒருமுறை பார்க்க நேர்ந்தது. 'மறித்திருக்கிறது' என்று ஒருவர், கோயிலிலே வந்து தான் வழக்கைத் தொடுப்பார். மறியல்கட்டு என ஒருபுறம் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வக் கோயில் பெரியவர்கள் கூடி,

வழக்கை விசாரித்து முடிவு கூறியுள்ளனர். (இதுபற்றிய முழு நல முறையையும் நன்கு விசாரித்து அறிந்து எழுதுவது நல்லது). மேலும் இக்கோயில்களைச் சார்ந்து, வேத பாடசாலைகளும் தேவார பாடசாலைகளும் முன்பு நடத்தப்பட்டு வந்துள்ளன. இன்று இக் கோயில்களை நன்கு சீர் திருத்தி அமைத்து, கற்பக விநாயகர் கோயில் போல - சமுகத் தலைமை இடங்களாக, திருமணம் நிகழிடங்களாக, சாந்தி முதலியன செய்துகொள்ளுமிடங்களாக, சமுகப் பொது நிகழ்ச்சி மையங்களாக மாற்றவேண்டும். அந்தந்தக் கோயிலைச் சேர்ந்தவர், அந்தந்தக் கோயில் போய்த்தான் சாந்தியோ, சதாபிடேகமோ செய்துகொள்ள வேண்டும் என ஒருபழக்கத்தை ஏற்படுத்தலாம். வசதி இருப்பதால், பிள்ளையார் பட்டியில் செய்வதும் குறையன்று. ஆயினும், அவ்வக் கோயில்களும் தழைக்க வேண்டுமேல் இத்தகைய பழக்கங்களே உதவ முடியும்.

### சமய மையங்களாகவும் சமுக மையங்களாகவும் ஒன்பது கோயில்களும் உயர வழி

அடுத்து இத்தகைய கோயில்களைச் சார்ந்து, கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட வேண்டும். உதாரணத்துக்கு, ஒரு கல்லூரியை, மேனிலைப்பள்ளியை, பல்தொழில் நுணுக்கப் பயிற்சிக் கல்லூரியை (பாலிடெக்னிக்), பொறியியல், மருத்துவஇயல், வேளாண்மைஇயல் கல்லூரிகளை இவை தொடங்கவேண்டும். பிள்ளையார்பட்டிக் கோயிலார் ஒரு மருத்துவக் கல்லூரியையும், இளையாத்தக்குடியார் ஒரு பொறியியல் கல்லூரியையும், இலுப்பைக்குடியார் ஒரு மகளிர் கல்லூரியையும் என இதுபோல் ஒவ்வொரு கோயிலாரும், இன்றுள்ள 76 நகரத்தார் கிராமப் பகுதிகளில் தொடங்கிட வேண்டும். திருப்பதி தேவத்தானம் மூலம் 'ஸ்ரீ வெங்கடேஸ்வரா யுனிவர்சிடியும்' பழனி அறநிலையச் சார்பில் பல கல்வி நிறுவனங்களும் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருவதுபோல, ஒன்பது நகரக் கோயில்களும் ஆதல் வேண்டும்.

(வளரும்)

---

## வெள்ளையன் இருப்பு பெருமாள் கோயிலில் திருமஞ்சனம்

காவிரிப்பூம்பட்டினம் நகர வீடுதிக்கு வெகு அருகில் வெள்ளையன் இருப்பு என்ற இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ராஜ நாராயணப் பெருமாள் கோவிலில் 4-8-90 சனிக்கிழமை காலை ஸ்ரீதேவி, பூதேவி உடனுய ராஜ நாராயணப பெருமாளுக்கு திருமஞ்சனம் (அபிடேகம்) நடைபெற்றது. பட்டினத்தடிகள் திருவிழாவிற்கு வருகை தந்த பொன். புதுப்பட்டி நாக. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் உட்பட நகரத்தார் ஆண்களும் பெண்களும் திருமஞ்சனத்தைத் தெரிசித்து மகிழ்ந்தனர். அவ்வமயம் பொங்கல், கடலை பிரசாதமும் வழங்கப் பெற்றது.

திருமஞ்சன ஏற்பாட்டை காரைக்குடி திரு. வெ. ராம. அ. வெ. சொக்கலிங்கம் செட்டியார் காரைக்குடி திரு. சித வெ. முரு. அரு. சீனிவாசன் செட்டியார் ஆகியோர் சிறப்பாகச் செய்து உதவினர்.

# நீதிபதி அரு. லெட்சுமணனுக்கு அளித்த பாராட்டு விழாவில்...

திரு. ஏ ஆர். லெட்சுமணன் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டிருப்பது நம் சமூகத்திற்கு அரசு அளித்துள்ள அங்கீகாரமாகும். அதற்காகக் குடியரசுத் தலைவர், தமிழக அரசு, டாக்டர் கலைஞர் ஆகியோருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். திரு. லெட்சுமணன் நீதியைக் கடைப்பிடித்து நம் சமூகத்திற்குப் பெருமை சேர்ப்பார்கள். அவர்கள் தலைமை நீதிபதியாக வரவேண்டும். இந்தியத் தலைமை நீதிமன்றத்திற்கும் செல்ல வேண்டும்.

- லெ. நாராயணன் செட்டியார்

நியாயம் சொல்ல வேண்டும் என்று இளமைக் காலத்தில் திரு. லெட்சுமணனை நாங்கள் அழைப்பதுண்டு. விளையாட்டு இன்று உண்மையாகி இருக்கிறது.

- கலைமகள்
இராம. நடராஜன் செட்டியார்

திரு. லெட்சுமணன் நீதிபதியாக வரவேண்டும் என என் தந்தையார் ஆசைப்பட்டார்கள். அவர்களது ஆசை ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நிறைவேறியிருக்கிறது. எங்கள் பங்காளியான அவரை நீதிபதியாக இரணியூர்க் கோயில் குடநீராட்டு விழாவில் வரவேற்றோம்.

- நடராஜ் அண்ணாமலை

பெருமைமிகு மாணவரான என்னுடைய மாணவர் அரு. லெ., மாண்புமிகு மாணவராக ஆகியிருக்கிறார். என் மகிழ்வுக்கு அளவே இல்லை.

- முனைவர் சுப. அண்ணாமலை

ஒரு ஆச்சியைப் பார்த்து "நீ என்ன கலெக்டர் பெண்டாட்டியா, இல்லை ஜட்ஜ் பெண்டாட்டியா?" என்று அன்று கேட்பார்கள். இப்போது அப்படிக் கேட்க முடியாது. நம்மிடையே பல நீதிபதிகள் இருந்தாலும் உயர்நீதி மன்ற முதல் நீதிபதி நீங்கள் தான். அப்படியே இனி வந்தாலும் அவர் இரண்டாவது தான்.

- சொ. சொ. மீ. சுந்தரம்

தேவகோட்டை நகரத்தார்கள் எதையும் எப்போதும் முதன்மையாகச் செய்யக் கூடியவர்கள். அந்த வகையில் தேவகோட்டைக்காரர் நீதிபதியாக வந்திருப்பது எங்களுக்கெல்லாம் பெருமை. அரு. லெட்சுமணன் அவர்களிடம் நான் நேரடியாகப் பயிற்சி பெறவில்லை. ஆனாலும் அவர்கள் எனக்குக் குரு. என்னுடைய சட்டப் படிப்புக்கு உதவினார்கள்.

- அரு. சோமசுந்தரம்

அரு. லெ. குடும்பத்தாரை எனக்கு 30 ஆண்டுகளாகத் தெரியும். அவர்கள் என் மீது நம்பிக்கை கொண்டவர்கள். எனக்கு வேண்டிய கருத்துக்களைத் தெரிவிப்பார்கள் எங்களுடைய மருத்துவமனைக்கு இடம் தேர்வு செய்தவர் லேனாவின் தந்தையார் தான்.

- டாக்டர் எம்ஆர். முத்தையா

நான் பிறந்ததிலிருந்து நகரத்தார் தொடர்புடையவன். சிறு வயதிலிருந்தே காரைக்குடி, தேவகோட்டைத் தண்ணீரைக் குடித்து வளர்ந்தவன். எனது அருமை நண்பர் திரு. லெட்சுமணன் அறத்திற்குக் குரல் கொடுப்பவர். அவருடைய உள்ளம் உயர்ந்தது; எனவே அவருடைய வாழ்வும் உயருகிறது.

- ரவீந்திரன் (வழக்கறிஞர்)

இந்தப் பாராட்டு என் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சி. நான்பெற்ற பேறு. என்னுடைய பதவிககளன பேப்பர் 10 இடங்களில் நகர்ந்து எனக்கு ஓராண்டில் இந்தப் பதவி கிடைத்தது. சட்டத் துறை சிறந்த துறை என்பது என் கருத்து. நம் மாணவர்களை சட்டக் கல்வி பயில அனுப்ப வேண்டும் நான் நல்லவர்களுக்காக வாதாடுவேன். நான் எடுத்துக்கொண்ட உறுதி மொழிப்படி நகரத்தார் நலனுக்கு வரம்பிற்கு உட்பட்டு என்னால் முடிந்த உதவிகளைச் செய்யக் காத்திருக்கிறேன்.

- அரு. லெட்சுமணன்

(சென்னை உயர் நீதி மன்ற நீதிபதியாகப் பதவியேற்றுள்ள மாண்புமிகு அரு. லெட்சுமணன் அவர்களுக்கு மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாக 28-7-90 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசியவை.)

# "ஆயா.. மாவுருண்டையா பண்ணித் தருவா"

ஆத்தா வாங்க... ஆயாவைப் பாருங்க...

ஆயாவுக்கு தொண்டைக்கும் நெஞ்சுக்குமா இழுத்துக்கிட்டிருக்கு... பெரிய ஆச்சி உங்களுக்குக் கை பார்க்கத் தெரியுமா...?

ஆயா கெடையாக் கெடக்கிறு.. கை பார்க்கத் தெரிஞ்சவங்க இருந்தா வந்து பாருங்க......

கீழப்பூங்குடி ஆச்சி வாங்க... சிதம்பர அண்ணே... சுந்தர அண்ணே... வாங்க... வந்து ஆயாவைப் பாருங்க... சதா உங்க நெனைப்புத்தான்...

ஆயா நல்லா இருந்தா மாவுருண்டையாப் பண்ணித் தருவா வெள்ளைப் பணியாரமாப் பண்ணித் தருவா... இனி எனக்கு யாரு பண்ணித் தருவாங்க...?

ஆயா வாலும் தோலுமாப் போயிட்டா. ஆயாவை நெனைச்சா கவலே கண்ணைப் பிடுங்குது...

ஆயா நல்லா இருந்தப்போ எனக்குப் பச்சைத் தேன் குழல் தந்தா... இனி எனக்கு யாரு தருவா....?

காரு அனுப்பியிருக்கு... டாக்டர் வந்தாத் தெரியும்... காப்பாத்த முடியுமான்னு பார்க்கணும்...

டாக்டர் வந்து ஊசி போட்டும் காப்பாத்த முடியலியே .. ஆயா... ஆயா.. மாவுருண்டைக்கு இனி நான் எங்கே போவேன் யாரு பண்ணித் தருவா...


ஆத்தா வாங்க... போன் பேத்திமார் எல்லாம் வாங்க.. காசித் தீர்த்தத்தை ஆயா வாயிலே ஊத்துங்க... சிவபுராணம் சொல்லுங்க... பசுவும் கன்றும் தானம் கொடுங்க... —

ஆயா காரியம் நல்லா முடிஞ்சு போச்சு — .. எனக்குத்தான் ரொம்பக் கவலேயா இருக்கு.. அழுக முடியலே... மாவுருண்டை.. வெள்ளைப் பணியாரம்......

— பழ. தெ. லெ. அருணாசலம் செட்டியார்

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழாவில் 2-8-90 அன்று ஞானகலாம்பிகை பரிபூரணமடையும் நிகழ்ச்சியில் பேரனாக நடித்தபோது கூறியது.)

# மணிவண்ணன் மடல்



## 9. பூனைக்கு யார் மணி கட்டுவது?

அன்புள்ள அண்ணனுக்கு,

வரதட்சிணைப் பிரச்சினையைப்பற்றி, நான் எவ்வளவு கவலையுடன் எழுதினாலும், என் காதில் விழும் செய்திகளின்படி பார்த்தால், 1 இலட்ச ரூபாய் கீழ் வரம்பாக (Minimum) இருக்கிறது அதற்குக் குறைந்த வரதட்சிணையே பெரும்பாலும் இல்லை. இந்தத் தொகையோடு, பையனுடைய படிப்பைப் பொறுத்து, வைர நகை ஒன்று, அல்லது இரண்டு கேட்கின்றார்கள். பெண்ணுக்குத்தான் 'கற்பகம்' என்று பெயர் வைப்பது வழக்கம் உண்மையில் பையன்தான் இப்போது 'கற்பகம்'.

நமது சமூகத்தில் 60 சதவீதம் மக்கள் கிட்டத்தட்ட வறுமை நிலையில் உள்ளார்கள் 20 சதவீதம் பேர் வேலைகளில் இருக்கிறார்கள். 10 சதவீதம் பேர் வசதி உடையோர். தம் பெண்களின் திருமணத்திற்காக, இந்த மூன்று வகையில் உள்ளவர்களும் 'திருமணச் சந்தையில்' போட்டிபோட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். விளைவாக, நம் சமூகத்தில் 50 சதவீதம் பேருக்குமேல், கடனாளிகளாகவோ, கலியாணம் ஆகாத, வயதுமீறிய பெண்களை வீட்டில் வைத்துக்கொண்டோ வேதனைப்படுகின்றார்கள்.

நிலைகள் நிலைக்கவில்லை.

மேற் கோப்புகள் நிழல் தர வில்லை. தூண்கள் ஆட்டம் கொடுத்துவிட்டன. பத்திகள் பந்திகளைக் காணவில்லை. எல்லாம் விற்பனைக்கு, சந்தைக்கு வந்துவிட்டன. நம் சமூகத்தின் நிலை இப்படிச் சீர்குலைந்து விட்டதைக் கண்ட பிறகும் கூட, நம்மவர்களுக்குச் சமூக உணர்ச்சி இல்லாமல், வரதட்சிணை மார்க்கெட் ஏறிக்கொண்டே போவது, நாம் எல்லோரும் கண்ணை நன்றாகத் திறந்துகொண்டே 'கிடுகிடு' பள்ளத்தில் விழுவதாகும். நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன்; ''பெண்களை வாழவைக்கும் சமூகம்தான் வாழும்.''

இந்தச் சிந்தனைகளுடன் தான், என் மடல்களில் சில யோசனைகளைத் தெரிவித்தேன். ''ஒரு வராகன் வரதட்சிணை, ஒரு வராகன் சீதனம் வாங்கிக்கொள்ள யார் முன்வருவார்கள்? இது நடக்கும் காரியமா? பணக்காரர் இதுபோல முதலில் செய்தால், மற்றவர்கள் பின்பற்றுவதற்குத் தைரியம் பெறுவார்கள்? மேலும் இது பெண்ணின் வாழ்க்கைப் பிரச்சினை ஆயிற்றே? பூனைக்கு யார் மணி கட்டுவது?''

—என்று நீங்கள் கேட்கலாம். ஆம் இது பெண்ணின் வாழ்க்கைப் பிரச்சினைதான். ஆனால் ஒரு இராமசாமி செட்டியாரின் மகள், ஒரு கண்ணப்ப செட்டியாரின் மகள் - இவர்களின் வாழ்க்கைப் பிரச்சினை மட்டும் அல்ல. நம் சமூகத்தில் 90 சதவீதம் உள்ள மிகச் சாதாரணக் குடும்பத்துப் பெண்களின் வாழ்க்கைப் பிரச்சினை. கண் மண் தெரியாமல், தலை தெறிக்க ஓடும் வரதட்சிணைக் குதிரையை, உடனடியாக நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

இது சமூகப் பிரச்சினை ஆதலால், நாம் அனைவரும் சேர்ந்து, பொது முயற்சி மேற்கொள்ள வேண்டும். அதற்காகவே, என் மடல்களில் முன் வைத்த ஆலோசனைகளில், ஒவ்வோர் ஊரிலும் நகரத்தார் கூட்டத்தினைக் கூட்டி, இதைப் பற்றிக் கலந்து ஆலோசித்து முடிவு செய்யவேண்டும் என்று ஒன்றைக் கூறியுள்ளேன்.

அண்ணன்,

உங்கள் ஊர்க்கோயில் நிருவாகத்தைக் கவனிக்கும் காரியக்காரர்களைக் கண்டு பேசி, அவர்களைக்கொண்டு, ஊர்க் கூட்டத்தைக் கூட்டச் செய்யுங்கள் அந்தக் கூட்டத்தில், ஊரில் உள்ள ஒவ்வொரு கோயில் நகரத்தாருக்கும் பிரதிநிதிகள் வந்து கலந்து கொள்ளும்படி அழைக்கப்பட வேண்டும். சம்பந்தம் செய்து கொள்ளும் ஊர்கள் அருகருகே இருந்தால் - கோனாபட்டு, ஆத்தங்குடி போல - இரண்டு ஊர்க்கும் சேர்த்துக் கூட்டம் அமைக்கலாம். சில ஊர்களில் இவ்வாறு அமைக்கும் கூட்டத்திற்கு நானும் வந்து கலந்து கொள்ளச் சித்தமாயிருக்கின்றேன். வசதியுடையவர்களும் மற்றவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும். ஆச்சிமார்களை முக்கியமாக அழைக்க வேண்டும்.

இந்தக் கூட்டம், யாரோ சிலர் மேடைப் பேச்சாகப் பேசி விட்டுப் போகும் கூட்டமாக இருக்கக்கூடாது கலந்துகொள்வோர் அனைவரும், தம் கருத்துக்களை மனம் விட்டுக் கூறி, கலந்து உரையாட வேண்டும்.

இந்தக் கூட்டம் எல்லா ஊர்களிலும் நடக்கவேண்டும். திருமணம் தொடர்பாக நான் சொல்லியிருக்கும் யோசனைகளை விவாத விஷயமாக எடுத்துக் கொள்ளலாம்.

அதற்கு உதவியாக, இது

பற்றிய எனது நான்கு மடல்களை யும், "கன்னியரின் கண்ணீ ரைத் துடையுங்கள்" என்ற தலைப்புடன் அச்சிட்டு, ஒவ் வொரு ஊர்க்கோயில் காரியக் காரர்களுக்கும், நம் நகரத்தார் சங்கங்களுக்கும் விரைவில் அனுப்பி வைக்கின்றேன்.

நான் விரும்புவதெல்லாம், "இந்தக் கூட்டங்களில் வரதட் சிணை, மற்றும் திருமணச் செலவுகளைச் சுருக்குதல் இவை பற்றி, நம் சமூகத்திற்கு நன்மை உண்டாகும் வகையில் முடிவுகள் செய்து, அவற்றைக் கடைப் பிடிப்பதை ஊர்க்கட்டுப்பாடு ஆக்க வேண்டும் என்பது தான்.

தனி வலிமை சிறிது, ஊர் வலிமை பெரிது. எனவே ஊர்க் கட்டுப்பாடு வைத்தால் நம்மைக் கவலைக்குள்ளாக்கிக் கொண் டிருக்கும் வரதட்சிணைப் பிரச் சினையை நல்ல முறையில் தீர்க்க லாம்

அன்புள்ள

மணிவண்ணன்

## மடம் தழைத்தால்...

மடம் தழைத்தால் குலம் தழைக்கும். துலாவூர் மடத்தைப் பொறுத்தவரையில் பெண்களுக் குப் பின்னுல் ஆண்கள் உள்ளனர். நாம் ஆத்மார்த்தமாக இறை வனை வழிபட வேண்டும். இறை வனுடைய தொண்டை நாம் செய்தால் நம்முடைய தொண் டை இறைவன் செய்வான். B. E. பட்டம் பெற்றபோது நான் கொள்ளாத பெருமையை இப் போது பெறுகிறேன்.

— ஏஎல். எஸ். அழகப்பன்

(துலாவூர் விலக்குச் சாலையில் கட்டுமான வளைவு, பேருந்து நிழற் கூடத் திறப்பு விழாவில்.)

# உண்ணு விரதப் போராட்டத்தில்...

180 ஆண்டுகளுக்கு முன்பு நாம் வெளிநாடுகளில் வாணிபம் செய்யத் தொடங்கினோம். அப்போது கணக்குப் பார்ப்பதற்காக மட்டும் நம்மவர்கள் படித்தார்கள். வெளிநாடுகளில் நாம் வாணிபம் செய்தாலும் இந்தியாவில்தான் தர்மங்களை அதிகம் செய்திருக்கிறோம். தர்ம சத்திரங்கள், கோயில்கள், மடங்களைக் கட்டினோம்.

நகரத்தார்கள் என்றால் கோடீஸ்வரர்கள் என நினைக்கிறார்கள். தம்மிடம் வசதியில்லை என்பதை வெளியில் சொல்ல வெட்கப்பட்டு பலர் அதை மூடி மறைத்து வருகிறார்கள். வீடுகளைப் பிரித்து விற்றவர்களை நம் சமூகத்தில் மட்டும்தான் பார்க்க முடியும். நம்மிடம் திறமை இருக்கிறது. அரசு வாய்ப்புத் தராததால் நம் திறமை வெளிப்படவில்லை.

1981ல் அ. தி. மு. க. அரசு ஆட்சி நடத்திய போது காரைக்குடியில் நகரத்தார் நல உரிமை மாநாடு ஒன்றை நடத்தினோம். முடிவு நல்லவிதமாக இல்லை. அரசின் சலுகை நமக்குக் கிடைக்கவில்லை.

நல்ல காரியத்திற்காக நாம் உண்ணாவிரதம் இருக்கிறோம். இது தொடக்கம் தான். தொடர்ந்து நடத்த வேண்டும். வலையபட்டியில் மாநாடு ஒன்றைக் கூட்டிக் கலைஞரை அழைத்து நம் கோரிக்கைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். நீங்கள் இடும் கட்டளைப்படி நான் செயலாற்றக் காத்திருக்கிறேன். இளைஞர்களைப் பாராட்டுகிறேன்.

— வி. என். சிதம்பரம் செட்டியார்

நான் ஆசிரியன். எனவே இத்துன்பங்களை நேரில் கண்டு அனுபவித்தவன். இது தொடர்துன்பம். நகரத்தார் சங்கங்கள் பாராட்டு

---



உண்ணா விரதப் போராட்டத்தில் மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் தலைவர் திரு. ஆர். சொக்கலிங்கம், செயலாளர் வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமி, திருமதி உமையாள் முத்து பேசும் காட்சிகள்.

விழாக்களை மட்டும்தான் நடத்தும் என் எண்ணிக் கொண்டிருந் தேன். இந்த இளைஞர் சங்கத்தினர் சாமிக்காக உண்ணுவிரதம் இருந்தனர். இப்போது சமூக நன்மைக்காக உண்ணுவிரதம் இருக் கின்றனர்.

நம்முடைய செல்வர்கள் நம்மைக் கவனிப்பதில்லை. செல்வம் சேரச் சேர ஒதுங்கி விடுகிருர்கள். செல்வர்கள் நினைத்தால் நம் கோரிக்கை நிறைவேறும்.

இன்றைய அமைச்சர்களில் பெரும்பாலானோர் நாம் ஏற்படுத் திய கல்லூரிகளில் பயின்றவர்கள்தான். 1200க்கு 1100 மதிப் பெண்கள் பெற்ற மாணவனுக்கு விரும்பிய படிப்புப் படிக்க முடிய வில்லை. வாய்ப்பில்லாதவர்களுக்கு அரசு எல்லாச் சலுகைகளையும் அளிக்க வேண்டும். கல்வியில் பிற்படுத்தப்பட்டோர் அல்லது பொருளாதார சமத்துவப் பங்கீடு என்று அறிவிக்கப்பட வேண்டும். நம் குலத்தில் பிறந்த கண்ணகி வெற்றி பெற்றதைப் போல நாமும் வெற்றி பெறுவோம்.

— முனைவர் தமிழண்ணல்

நகரத்தார்களாகிய நாம் இப்போது தெருவுக்கு வந்திருக் கிறோம். நாட்டின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு நாம் நிறையப் பாடுபட்டிருக்கிறோம். நம்மைப்பற்றி நாம் எண்ணிக்கொள்ளவில்லை; மாறாக நம் எண்ணங்கள் மற்றவர்கள் முன்னேற உதவின. நம் சமூகத்தில் உள்ள பல்வேறு வகையான அவலங்களை எடுத்துவைக்க நாம் இங்கு கூடியிருக்கிறோம்.

ஒரு காலத்தில் வணிகத்தில் நாம் உயர்ந்திருந்தோம். இப்போது நிலைமை அப்படியில்லை, 75 சதவிகித நகரத்தார்கள் வறுமையில் உழன்று கொண்டிருக்கிருர்கள்.

அமைச்சர்கள் நம் செட்டிநாட்டு ஊர்களுக்கு வரட்டும்; விசாரிக்கட்டும். அதன்பின் முடிவு மேற்கொள்ளட்டும். நம் சமயப் பயணங்கள் இனி கோட்டைக்குச் செல்ல வேண்டும்.

— முனைவர் சுப. அண்ணுமலை

சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்தவர்கள் நகரத்தார் கள். அப்படிப்பட்டவர்கள் செட்டிநாட்டுப் பகுதியில் பொருளா தார வசதியின்றி அல்லற்படுகின்றனர் இந்த உண்ணுவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து பொன். புதுப்பட்டியில் மாபெரும் உண்ணுவிரதப் போராட்டத்தை நடத்த உள்ளோம்.

— கலைமகள் இராம. நடராஜன் செட்டியார்

கோவலன் - கண்ணகிபால் ஈடுபாடு கொண்டு பூம்புகாரிலே எழுநிலை மாடம் ஏற்படுத்தியவர்களைர். அவர் நகரத்தார் நினைவாக நகரத்தார் சமூகத்தைப் பிற்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்துத் தரவேண்டும்.

1940க்குப் பின்தான் நாம் படிக்கத் தொடங்கினோம். மற்ற இனத்தில் 1940க்கு முன்பு படித்துப் பட்டம் பெற்றவர்கள் அதிகம்.



மதுரை நகரத்தார் இளைஞர் சங்கம் 27-7-90 அன்று மதுரையில் நடத்திய உண்ணா விரதப் போராட்டத்தில் தி. மு. க.வைச் சேர்ந்த திரு சொ. காவேரிமணியமும் ஜனதா தளத்தைச் சேர்ந்த திரு. க. ஜான்மோசஸும் கலந்து கொண்டு பேசும் காட்சிகள்.

---

நகரத்தார் இனம் நன்றியுள்ள இனம். பள்ளிகள், கல்லூரிகள், கோயில்கள், மடங்கள் பல்கலைக் கழகம் ஆகியவற்றை ஏற்படுத்திய இனம் நம் இனம். நகரத்தார் செய்த சேவையின் பெயரால் அரசின் சலுகைகளைக் கேட்கிறோம்.

இந்த உண்ணா விரதம் தொடக்கம் தான்; முடிவல்ல. கோட்டை வாசற்படிக்கும் போகும் இந்தப் போராட்டம். சந்தர்ப்பம் ஏற்பட்டால் சிறைக்குப் போகவும் தயாராக இருக்கிறோம்.

— பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம்

நம் இளைஞர்கள் நன்கு படித்தும் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் தவிக்கிறார்கள். வேலை வாய்ப்பிலும் அப்படியே தான். பணம் கொடுத்துச் சேருகிற நிலை எல்லோருக்கும் இல்லை. இப்போராட்டத்திற்கு நிறைய விவேகானந்தர்கள் வரவேண்டும். இப்போராட்டம் கோட்டையில் நிகழ்வதானாலும் ஆதரவு தருவோம்.

— திருமதி உமையாள் முத்து

உண்ணாவிரதத்தின் முதல் கட்டம் இது. தற்செயலாக முடிவான நாள். இன்று சஷ்டி. எனவே நமது கோரிக்கைகளுக்கு முருகன் துணையிருப்பான். 1929ல் ரூ. 50 இலட்சம் செலவில் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களால் ஏற்படுத்தப் பெற்றது அண்ணாமலைப் பல்கலைக் கழகம். இந்தியாவில் ஒரு தனி நபரால் வேறு எந்தப் பல்கலைக் கழகமும் ஏற்படுத்தப்பட்டதாக வரலாறு இல்லை. 1200க்கு 1077 மதிப்பெண்கள் பெற்ற ஒரு மாணவனுக்குக்

கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்கிற போது அவன் நகரத்தார் சமூகத்தில் பிறந்ததே பாவம் என்றாகும். 'அறிவு பெற வழி கொடுங்கள்' என்று தான் நாம் அரசைக் கேட்கிறோம்.

— எம். சிஎன். மாணிக்கம்

நகரத்தார் என்றாலே தனி நாகரிகம் படைத்தவர்கள்; நல்ல அந்தஸ்துடையவர்கள்; பெரிய பெரிய தொழில்களைச் செய்து வருபவர்கள்; வாய்ப்பு வசதி பெற்றவர்கள் என்ற எண்ணம் பரவலாக உள்ளது. தகுந்த ஆதாரங்களுடன் உங்களது கோரிக்கைகளை முன்வைத்தால் எங்கள் தலைவர் கவனிப்பார்.

— வழக்கறிஞர் சொ. காவேரிமணியம்
(மதுரை நகர் மாவட்ட தி. மு. க. செயலாளர்)

சமூக நலத்திற்காக இளைஞர்கள் உண்ணாவிரதம் இருப்பதைப் பாராட்டுகிறேன். உங்கள் கோரிக்கைகளைக் கலைஞர் நிறைவேற்றா விட்டால் இனி யாரும் வந்து நிறைவேற்றமாட்டார்கள். இப்போது மத்தியிலும் மாநிலத்திலும் ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது. இது சரியான தருணம். நீங்கள் சிறைக்குச் செல்லவும் தயாராக இருக்க வேண்டும். நகரத்தார்கள் என்றாலே வசதிமிக்கவர்கள் என்று நினைக்கிறார்கள். உங்களது ஒற்றுமை ஓங்கட்டும்; முயற்சி வெல்லட்டும்.

— க. ஜான்மோசஸ்
(மதுரை நகர் ஜனதா தளத் தலைவர்)

(நகரத்தார் சமூகத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரி மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தினர் 27-7-90 அன்று மதுரையில் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு பேசிய சிலரின் பேச்சுக்கள் இவை)

தொகுப்பு: ''எல்லெஸ்''



# செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ காரைக்குடி முத்துப்பட்டணம் மீனாட்சி அம்மன் கோயிலிலிருந்து 4-8-90 அன்று திரு. மெ. இராம நாதன் ஏற்பாட்டில் 81 நகரத்தார்கள் பேருந்து மூலம் ஒன்பது நகரக் கோயில்களுக்கும் இரண்டாம் முறையாகச் சென்று வழிபாடு செய்து திரும்பினர்.

ஃ நாட்டரசன்கோட்டை சுப. ராம. மெ. நடராஜன் செட்டியார் அவர்கள் நாட்டரசன் கோட்டை கடைத் தெருவில் புதிதாக இராமர் கோயில் ஒன்றைக் கட்டி வருகிறார்கள்.

ஃ பலவான்குடி நகரச் சிவன் கோயிலின் மண்டலாபிடேக விழா 20-7-90 அன்று சிறப்பாக நடைபெற்றது. அன்று குடநீராட்டு விழா மலரை கோவிலூர் ஆதீனம் தவத்திரு காசி விசுவநாத சுவாமிகள் வெளியிட தேவகோட்டை சேவு. அண. அண்ணாமலை செட்டியார் அவர்கள் முதல் மலரினைப் பெற்றுக் கொண்டார்கள்.

ஃ புதுக்கோட்டை மாவட்டம் செவலூர் அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன் திருக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா 2-9-90 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ சிதம்பரம் சுழற்குழுத் தலைவராக கீழச்சிவல்பட்டியைச் சேர்ந்த திரு. இராம. சித. சுப்பையாவும் சிதம்பரம் அரிமா சங்கத்தின் தலைவராக காரைக்குடி பேராசிரியர் முனைவர் பி.எல். சபாரத்தினமும் பொறுப்பேற்றுள்ளனர்.

## தீபாவளிச் சிறப்பிதழ்

"நகரத்தார் குரல்" லின் அக்டோபர் '90 இதழ், தீபாவளிச் சிறப்பிதழாக புதுப் பொலிவுடனும் அதிகப் பக்கங்களுடனும் 6-10-90 அன்று வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

விளம்பரதாரர்கள் தங்களது விளம்பரங்களை 20-9-90க்கு முன்னதாக அனுப்பி உதவக் கேட்டுக் கொள்கிறோம்.

— ஆசிரியர்

ஃ சென்னை கம்பன் கழகத்தின் சார்பில் 10, 11 & 12-8-90 ஆகிய மூன்று தினங்கள் ஏவி. எம் - ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் பதினாறும் ஆண்டு கம்பன் விழாச் சிறப்பாக நடை பெற்றது.

ஃ புதுவயலில் தோன்றிய மகான் திருக்களர் ஆண்டவர் வீரப்ப செட்டியார் அவர்களுக்கு சாக் கோட்டையில் 27-8-90 அன்று குருபூஜையும் அன்னதான விழா வும் நடைபெற்றன.

ஃ சென்னை உயர் நீதிமன்ற நீதி பதி மாண்புமிகு அரு. லெட்சு மணன் அவர்களுக்கு தெற்கு வட்டகை நகரத்தார்கள் சார் பாக 11 8-90 அன்று நாட்டர சன்கோட்டையில் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். தென்னரசு தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றன.

ஃ கும்பகோணம் நகரத்தார் சங்கத்தின் சார்பாக நீதிபதி மாண்புமிகு அரு லெட்சுமணன் அவர்களுக்கு 19-8-90 அன்று பாராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

ஃ தஞ்சாவூர்க் கிளை அகில பாரத ஐயப்ப சேவா சங்கத்தின் 4 ஆம் ஆண்டு சீருடை வழங்கும் விழா 5-8-90 அன்று நடை பெற்றது.

ஃ டாக்டர் ராஜாசர் மு. அ. முத்தையாச் செட்டியார் அவர் களின் 86ஆவது பிறந்த நாள் விழாவும் மற்றும் நினைவுப் பரிசு வழங்கிய விழாவும் 5-8-90 அன்று மாலை சென்னை ராணிசீதை மன்றத்தில் நிகழ்ந்தது.

ஃ ஈரோடு இளங்கோ இசை நாட்டியப் பள்ளியின் ஆண்டு விழா 18-8-90 அன்று சம்பத் நகர் கொங்கு கலையரங்கத்தில் நடைபெற்றது.

ஃ ஈரோடு நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் 23ஆம் ஆண்டு நிறைவு விழா 5-8-90 அன்று நடைபெற்றது.

---

## பாராட்டுகிறோம்

படத்தில் காணும் செல்வி எம். அலமு மதுரையில் உள்ள பெண்களுக்கான அரசு தொழில் நுட்பக் கல்லூரியில் ஆடைகளுக் கான வடிவமைப்பு மற்றும் ஆடை தயாரிப்புக் (Costume Design & Dress Making) துறை யில் கல்வி கற்று கடந்த ஏப்ரல்' 90ல் நடைபெற்ற பொதுத் தேர் வில் 1000க்கு 829 மதிப்பெண் கள் பெற்றுத் தேர்ச்சியடைந் துள்ளார். இவரது வகுப்பில்



இதே கல்வி கற்ற 22 பெண்களில் இவர் முதலாவதாகவும் வந்துள் ளார்.

இவர் காரைக்குடி கரு. சுதி. கருப்பன் செட்டியார் (வாலாப் பூர் கானா ருனா) அவர்களது பேத் தியும் திரு. கரு. முருகப்பனின் புதல்வியுமாவார். இவர் வயிர வன் கோவில் சிறுகுளத்தூருடை யார் பிள்ளையார் வகுப்பைச் சேர்ந்தவர்.

செல்வி எம். அலமுவின் திற மையைப் பாராட்டுகிறோம்.

# ஏழாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் : 10-5-1928

மறைவு : 26-9-1983

## பாகனேரி திருமதி மா. மீனாட்சி ஆச்சி

அன்பு அகலாத மனைவியாய் பாசமிகு தாயாராய் மருமகள் மெச்சும் மாமியாராய் ஈடில்லா அன்பு செலுத்தி பேரன்புப் பாட்டியாய் வாழ்ந்து இந்நாளில் எங்களை எல்லாம் மீளாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டுப் பிரிந்த உங்களுக்கு எங்கள் இதய அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

நெஞ்சிருக்கும் வரை உன் நினைவிருக்கும்

**சுப. வே. மாணிக்கம் செட்டியார் - கணவர்**

மக்கள்

**மா. தியாகராஜன் - மரகதம் தியாகராஜன்**
**மா. ராம. சுப்பிரமணியன் என்ற**
**கார்த்திக் (பேரன்) - பிரேமா இராமகிருஷ்ணன்**
**வள்ளியப்மை - S. சேதுஇராமனுதன் (சிங்கப்பூர்)**
**காமாட்சி - உ. சம்பத்து**
**விஜயலெட்சுமி - M. S. முத்துராமன்**
**செல்லமீனுள் - SP. ரவி என்ற இராமனுதன்**

மற்றும் பேரன் பேத்திகள்

**மீனாட்சி அன் கோ., பைனான்சியர்ஸ்**
44-A, தெற்கு மாசி வீதி, மதுரை-625 001
**ஸ்ரீ லெட்சுமி கார்ப்பொரேஷன்,**
இரும்பு மொத்த வியாபாரம்
56-57, சப் ஜெயில் ரோடு, திருச்சி-620 008
தொலைபேசி எண் : 27924 & 33740
மீனாட்சி இல்லம், ராமலிங்க நகர், திருச்சி-620 003

## நீதிபதி அரு. லெட்சுமணனுக்குப் பாராட்டு விழா

நம் சமூகத்தில் முதன் முதலாக சென்னை உயர் நீதி மன்ற நீதிபதியாக நியமிக்கப் பெற்றுப் பதவி ஏற்றுள்ள தேவகோட்டையைச்சேர்ந்த நீதிபதி மாண்புமிகு அரு. லெட்சுமணன் அவர்களுக்கு மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாக அதன் தலைவர் 'அறநெறியண்ணல்' லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமையில் 28-7-90 அன்று மாலை நகர விடுதியில் பாராட்டு விழா நடைபெற்றது.



செயலாளர், பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் வரவேற்றுப் பேசினர். லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமையுரையாற்றினர்கள்.

மாண்புமிகு அரு. லெட்சுமணன் அவர்களைப் பாராட்டி கலைமகள் திரு. இராம. நடராஜன் செட்டியார், முனைவர், தமிழாகரர் திரு. சுப. அண்ணுமலை திரு. நடராஜ் அண்ணுமலை, திரு. அரு. சோமந்தரம் திரு ஆவி. ராம. மெய்யப்ப செட்டியார், டாக்டர் திரு. எம். ஆர். முத்தையா கவிஞர் திரு. சொக்கு சுப்பிரமணியம், வழக்கறிஞர் திரு. ரவீந்திரன் ஆகியோர் பேசினர்கள்.

விழாக் குழு சார்பாக முனைவர் திரு. சுப. அண்ணுமலை நீதிபதிக்கு வாழ்த்து மடல் வாசித்தளித்தார். கலைமகள் திரு. இராம. நடராஜன் செட்டியார் பொன்னுடை போர்த்தினர். நீதிபதி திரு. அரு. லெ.யின் துணைவியார் திருமதி மீனுட்சி லெட்சுமணனுக்கு திருமதி மீனுட்சி சோமசுந்தரம் பொன்னுடை போர்த்தி மாலை அணிவித்தார்.

நீதிபதி மாண்புமிகு அரு. லெட்சுமணன் அவர்கள் பாராட்டுக்களுக்கு ஏற்புரை நல்கினர்கள்.

விழாத் தொடக்கத்தில் எவர் பிரைட் திரு. ஆவி. நாச்சியப்ப செட்டியார் இறைவணக்கம் பாடினர். அதற்கு முன்பு மாண்புமிகு அரு. லெட்சுமணன் அவர்கள் நீதிபதியாகப் பதவி ஏற்ற நிகழ்ச்சி வீடியோ மூலம் திரையிட்டுக் காட்டப் பெற்றது. இதற்கான ஏற்பாட்டை திரு. எம். சிஎன். மாணிக்கம் சிறப்புறச் செய்து உதவினர்.

விழாவின் இறுதியில் செயலாளர் திரு. எம். சிஎன். மாணிக்கம் நன்றி கூறினர்.

இவ்விழாவில் மதுரை நகர விடுதிக் கட்டிடத் திருப்பணிக்கு நீதிபதி திரு அரு. லெட்சுமணன் அவர்கள் ரூ. 1001/- நன்கொடை அளித்தார்.

---

ஃ துலாவூர் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகர் அவர்களுக்கு புரட்டாசி மீ 19 உ (5-10-90) வெள்ளிக்கிழமை துலாவூர் ஆதீனத்தில் குருபூஜை நிகழவிருக்கிறது.

உ



# தீபாவளி கங்கா ஸ்நானம் காசி யாத்திரை

தீபாவளியன்று காசியில் கங்கா ஸ்நானம் செய்து தங்க அன்னபூரணி, தங்க விசாலாட்சி, மிட்டாய்த் திருவிழா, லட்டுந் தேர் பார்த்தல்,

13—10—90 முதல் 10 நாட்கள் : காசி - சாரநாத் - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ. 1250/-

13—10—90 முதல் 14 நாட்கள் : காசி - சாரநாத் - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) டெல்லி - ஆக்ரா - மதுரா - ஹரித்துவார் - ரிஷிகேஷ் யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ. 1850/-

13—10—90 முதல் 14 நாட்கள் : காசி - சாரநாத் - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) நேப்பாள் (காட்மண்டு) அயோத்தியா. நபர் ஒன்றுக்கு ரூ 1850/-

13—10—90 முதல் 20 நாட்கள் : காசி - சாரநாத் - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) டெல்லி-ஆக்ரா-மதுரா-ஹரித்துவார்-ரிஷிகேஷ்-பத்ரிநாத்-கேதார்நாத் யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ 2400/-

மேற்கண்ட கட்டணங்கள் யாவும் ரயில் கட்டணம், ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு, சாப்பாடு அடங்கியவையாகும், தேவையான இடங்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 500/- வீதம் அட்வான்ஸ் செலுத்தி விரைவில் டிக்கட் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

SRI MURUGAN TRAVEL AGENCY MADURAI

## ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜன்ஸி

9, வடக்காவணி மூல வீதி, மதுரை-625 001.

போன் : 31168

# காவிரிப்பூம்பட்டினத்துச் செய்திகள்

ஃ நாம் பிறந்த மண்ணாகிய காவிரிப்பூம்பட்டினத்தில் பிரமோதூத ஆண்டு ஆடி மீ 11உ (27-7-90) முதல் ஆடி மீ 22உ (7-8-90) வரை 12 நாட்கள் பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

ஃ இத் திருவிழாவிற்கு சென்ற ஆண்டைக் காட்டிலும் நகரத்தார்கள் அதிக அளவில் வந்திருந்தனர்.

ஃ இத்திருவிழாவின் 2 ஆம் திருநாளன்று (28-7-90) திருவெண்காட்டில் உள்ள விடுதியில் தேவகோட்டை மு. ராம சுப. குடும்பத்தார் திருவிழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் மதிய உணவும் இரவு உணவும் இலவசமாக வழங்கினார்கள்.

ஃ 28-7-90 அன்று மாலையில் காரைக்குடி செக்காலை க. அ. ப. அண்ணாமலை செட்டியார் குடும்பத்தார் அனைவருக்கும் மிக்சர், காபி இலவசமாக வழங்கினார்கள்.

ஃ 3 ஆம் திருநாளன்று (29-7-90) காலையில் திருவெண்காட்டில் உள்ள பழநியப்பா அரிசி அரவை ஆலையில் கொப்பனாபட்டி லெ. பழ. குடும்பத்தார் வந்திருந்த அனைவருககும் காலைப் பலகாரம், காபி இலவசமாக வழங்கினார்கள்.

ஃ 3 ஆம் திருநாள் திருக்கல்யாணத்தன்று காவிரிப்பூம்பட்டினத்து நகரவிடுதியில் கண்டவராயன்பட்டி நா. சி. சொ. குடும்பத்தார் அனைவருக்கும் மதிய உணவு இலவசமாக வழங்கினார்கள்.

ஃ 3 ஆம் திருநாள் இரவு கண்டவராயன்பட்டி ஏஎல். எஸ். அழகப்பன் அவர்கள் நகரவிடுதியில் அனைவருக்கும் இரவு பலகாரம் இலவசமாக வழங்கினார்கள்.

ஃ 4 ஆம் திருநாளன்று (30-7-90) சாயாவனத்தில் உள்ள அருள்மிகு சாயாவனேஸ்வர சுவாமி திருக்கோயிலில் நாட்டரசன்கோட்டையைச் சேர்ந்த ஆசிரியர் திரு. கண. சுப்பையா "நாளும் கோளும்" என்ற தலைப்பில் பேருரையாற்றினார்.

ஃ 4 ஆம் திருநாளன்று பகலில் கண்டவராயன்பட்டி சுப. சு. சிங்காரம் செட்டியார் அவர்கள் நகரவிடுதியில் அனைவருக்கும் மதிய உணவு இலவசமாக வழங்கினார்கள்.

ஃ 30-7-90 அன்று மாலை காவிரிப்பூம்பட்டினம் நகர விடுதியில் புதிதாக ரூ. 2.60,000 செலவில் கட்டி முடிக்கப் பெற்றுள்ள சாப்பாட்டுக் கூடத்தை 'அறமனச் செம்மல்' சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தலைமையில் திரு. வயி. அழ. சின்னஅழகப்பன் திருவிளக்கேற்றிவைக்க 'மீனாட்சி திருமைந்தன்' வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

ஃ 30-7-90 அன்று இரவு கண்டவராயன்பட்டி பெரி. சோம. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் (கல்கத்தா சோவன்னா மானா) வந்திருந்த அனைவருக்கும இலவசமாகப் பலகாரம் வழங்கினார்கள்.

ஃ 6 ஆம் திருநாளன்று (1-8-90) காலையில் கண்டரமாணிக்கம் டத்தோ நாச்சியப்ப செட்டியார் அவர்கள் தலைமையில் திரைப்படத் தாயரிப்பாளர் திரு. பழ. கருப்பையா பட்டினத்தார் பற்றி பேருரையாற்றினார்.

ஃ 6 ஆம் திருநாளன்று

## கர்நாடகா - மைசூர் தசரா யாத்திரை

### 23—9—90 To 30—9—90 8 நாட்கள்

### டிலக்ஸ் பஸ் பிரயாணம்

மதுரை - பெங்களூர் - மந்த்ராலயம் - சரவணபெலகுலா - பேளூர் - ஹாலேபீடு - சிருங்கேரி - மூகாம்பிகை - உடுப்பி - தர்மஸ்தலம் - சுப்ரமண்யா - மைசூர் - பன்னூரி - மதுரை.

பஸ் கட்டணம், காலை பலகாரம் - காபி, மதிய உணவு, மாலை ஸ்வீட் - காரம் - காபி, இரவு ஆகாரம், தங்கும் வசதி உள்பட நபர் 1க்கு நாள் 8க்கு கட்டணம் ரூ. **675/-**
3 வயது முதல் 10 வயது வரை அரைக் கட்டணம்
ரூ. **550/-**

---

## தீபாவளி கங்கா ஸ்நான வடஇந்திய காசி யாத்திரை

### 13—10—90 முதல் 12 நாட்கள்

காசி - சாரநாத் - கயா - புத்தகயா - அலகாபாத் - (திரிவேணி) - அயோத்யா.

பிரமோதூத வருடம் புரட்டாசி மீ 27 உ (13—10—90) சனிக்கிழமை மாலை சென்னை சென்ட்ரல் ரயில் நிலயத்திலிருந்து பயணம் துவங்குகிறது.

இரண்டாம் வகுப்பு III டயர் (தூங்கும் வசதி) ரயில் கட்டணம் ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு, காலைப் பலகாரம் - காபி, மதிய உணவு, இரவு ஆகாரம் உள்பட
நபர் 1க்கு நாள் 12க்கு கட்டணம் ரூ. **1250/-**

குறைந்த இடங்களே உள்ளன. விரைவில் அட்வான்ஸ் ரூ. **750/-** வீதம் செலுத்திப் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

விபரங்களுக்கு :

SUBAM TRAVEL AGENCY
**சுபம்**
டிராவல் ஏஜன்ஸி
226, நாயக்கர் புதுத்தெரு, மதுரை-1. ☎ 22712

போன் : 22712
Prop : சொ. சுப்பிரமணியம்

(1-8-90) இரவு 8 மணி அளவில் நகர விடுதியில் தேவகோட்டை அப்பு லெ. பெரி. வெ. குடும்பத்தைச் சேர்ந்த திரு. வி. எல். இராமநாதனின் புதல்வி செல்வி மாலதி இராமநாதனின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

ஃ 7 ஆம் திருநாளன்று (2-8-90) தொழிலதிபர் இராங்கியம் நா. அ. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் தலைமையில் ''அடிகளும் அரசும்'' என்ற தலைப்பில் பேராசிரியர் திரு. சுப. கதிரேசனும் ''பெரிய புராணம்'' என்ற தலைப்பில் 'காசிஸ்ரீ' திரு. அரு சோமசுந்தரனும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள்.

ஃ 2-8-90 அன்று நகரவிடுதியில் மங்கலப் பொருட்கள் ஏலம் விடப்பெற்றன. காரைக்குடி திரு. பழ தெ. லெ. அருணாசலம் செட்டியார் ஏலம் கூவ, பொன். புதுப்பட்டி நாக. இராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் ஏலப் பொருட்களை வழங்கினார்கள்.

ஃ 8 ஆம் திருநாளன்று (3-8-90) மாலையில் நகரவிடுதியில் ஒன்பது நகரக் கோவில்களையும் சேர்ந்த 108 சுமங்கலிப் பெண்கள் பங்கு பெற்ற திருவிளக்குப் பூஜை நடைபெற்றது.

ஃ 8 ஆம் திருநாளன்று இரவு கண்டரமாணிக்கத்தைச் சேர்ந்த டத்தோ நாச்சியப்ப செட்டியார் அவர்கள் அனைவருக்கும் இலவசமாக பலகாரம் வழங்கினார்கள்.

ஃ 9 ஆம் திருநாளன்று (4-8-90) காலை புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் நடுவர் பொறுப்பேற்க ''பெண்மை மென்மை மீறலாமா?'' என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. முனைவர் திரு. சபா. அருணாசலம் வழக்குத் தொடுக்க முனைவர் திரு. கரு. முத்தையா மறுத்தார்.

ஃ அதனைத் தொடர்ந்து பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் ''ஆற்றில் கரைத்த புளி'' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பெருக்காற்றினார்.

ஃ 4-8-90 சனிக்கிழமை சனிப் பிரதோஷத்தன்று காவிரிப்பூம் பட்டினத்தில் உள்ள பல்லவனீச்சரக் கோவிலில் நகரத்தார்கள் சுவாமி தூக்கி சேவை செய்தார்கள்.

ஃ 10 ஆம் திருநாள் பட்டினத்தடிகளின் குருபூஜையன்று (5-8-90) கோவிலூர் தவத்திரு காசி விசுவநாத ஞானதேசிக சுவாமிகள் நகரவிடுதிக்கு வருகை தந்தார்கள்.

ஃ இந்த ஆண்டு பட்டினத்தடிகளின் அற்புதத்திருவிழா நிகழ்ச்சிகளை கண்டவராயன்பட்டி ஏஎல். எஸ். அழகப்பன் அவர்களது முயற்சியில் காரைக்குடி தம் வீடியோ நிறுவனத்தின் உரிமையாளர் திரு. எஸ். இராமநாதன் வீடியோ படம் எடுத்தார்.

ஃ தேவகோட்டை 'காசிஸ்ரீ' சிதம்பரம் செட்டியார் அவர்கள் இந்த ஆண்டு காவிரிப்பூம்பட்டினம் திருவிழாவில் 26 ஆண்களுக்கு உபதேசம் செய்து வைத்திருக்கிறார்கள்.

---

## குருபூசை

கானையார் கோயில் கா. செ. வேதாந்த மடாலயத்தில் அதன் குரு முதல்வர் செல்லப்ப சுவாமிகளின் நினைவாக 11-8-90 அன்று குருபூஜை இனிதே நிகழ்ந்தது. அதனை ஒட்டி நிகழ்ந்த சத்சங்கத்திற்குக் கோவிலூர் சுவாமிகள் எழுந்தருளினார்கள் திரு. சோம. நாராயணன் வரவேற்றார். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் ''அடியவர் பெருமை'' பற்றி உரையாற்றினார். பல ஊர்களில் இருந்து ஏராளமான நகரத்தார்கள் வந்திருந்து சிறப்பித்தனர்.

## தாலாட்டு

பட்டினத்தடிகளின் 4ஆம் திருநாள் (30-7-90) நள்ளிரவில் மருதவாணர் குழந்தைக்குத் தாலாட்டும் நிகழ்ச்சி பல்லவனீச்சரக் கோயில் முன்பு நடைபெற்றது. அப்போது திருவாளர்கள் ஆத்தங்குடி விகடம் காசிச் செட்டியார், தாலாட்டுக் கவிஞர் வேந்தன்பட்டி T. குமரப்பன், ஒ சிறுவயல் கு. வெ. கு. வெங்கடாசலம் செட்டியார், நடராஜபுரம் சுப. சுப. நாராயணன் காரைக்குடி க. அ. ப. அ. பழநியப்பன், சொக்கநாதபுரம் கோதையாச்சி, பாகனேரி டிஆர். எஸ்டி. கேஎன். கோமதி ஆச்சி. நாட்டரசன்கோட்டை லெட்சுமி ஆச்சி ஆகியோர் தாலாட்டுப் பாடல்களைப் பாடினர். இந்த நிகழ்ச்சியில் நாட்டரசன் கோட்டை திரு. உ. கருப்பையா செட்டியாரும் தேனிபட்டி திரு இராம. ஏகப்பனும் குழந்தைக்கு 'மருதவாணர்' எனப் பெயரிட்டனர்.

## மாலதி இராமநாதனின் பரத நாட்டியம்

பட்டினத்தடிகளின் 6 ஆம் திரு நாளன்று (1-8-90) இரவு 8-00 மணி அளவில் தேவகோட்டை அப்பு லெ. பெரி வெ. குடும்பத்தைச் சேர்ந்த திரு. வி. எல். இராமநாதனின் புதல்வி செல்வி மாலதி இராமநாதனின் பரத நாட்டியம் நகர விடுதியில் சிறப்பாக நடைபெற்றது. செல்வி மாலதி எட்டு நடனங்களை மட்டுமே ஆடினாலும் அத்தனையும் முத்தாக இருந்தது. 'நடனம் ஆடினார்... வெகு நாகரிகமாகவே கனக சபையில்...' என்ற பாடலுக்கு செல்வி மாலதி பானை மீது நின்று ஆடிய நடனம் பெண்கள் உட்பட அனைவரையும் கவர்ந்தது. செல்வி மாலதி இராமநாதனைப் பாராட்டி பொன். புதுப்பட்டி நாக. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் பொன்னாடை அணிவித்தார்கள். கொ. லெட்சுமிபுரம் 'இரசிகமணி' இராம. சிதம்பரம் செட்டியார் அவர்களும் ''நகரத்தார் குரல்'' இதழின் துணை ஆசிரியர் திரு. எல். சுந்தரமும் பாராட்டிப் பேசினார்கள். முன்னதாக தாலாட்டுக் கவிஞர் வேந்தன்பட்டி திரு. T. குமரப்பன் அறிமுகம் செய்து கவிதையில் வாழ்த்தினார்.

## இளஞ்செழியன் இயற்கை எய்தினார்

நாட்டரசன்கோட்டை பசுமடம் வெ. கண. வெ. வெள்ளையப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் திரு. இளஞ்செழியன் என்ற கைலாசம் 15-8-90 அன்று இயற்கை எய்தினார். இவர் பாண்டிச்சேரி ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் கிளையில் மேனேஜராகவும் ''தமிழ் முரசு'' பத்திரிகையில் செய்தியாளராகவும் பணியாற்றியவர். தமிழகச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். தென்னரசு சிவகங்கை நகராட்சித் தலைவர் திரு. சொ. லெ. சாத்தையா காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சண்முகம் ஆகியோர் மலர்மாலை அணிவித்துத் தங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

## இயற்கை எய்தினார்

சொக்கநாதபுரம் சி. அழ. சொ. காசிச் செட்டியார் அவர்களது துணைவியார் திருமதி கா. தெய்வானை ஆச்சி அவர்கள் தமது 63 ஆவது வயதில் 7-8-90 அன்று இயற்கை எய்தினார்கள்.

## அந்தக் காலமும் இந்தக் காலமும்

அந்தக்காலத்தில் பலர் 5 ஆண்டுகளில் 6 பிள்ளைகளைப் பெற்றெடுத்திருக்கிறார்கள் அது இந்தக் காலத்திற்குக் கட்டுபடி ஆகாது.

அந்தக் காலத்தில் நகரத்தார்கள் வெளிநாடு சென்றால் மூன்று ஆண்டுகளுக்குப் பின்புதான் தாயகம் திரும்புவார்கள். அந்த வகையில் குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்திருக்கிறார்கள்.

அந்தக் காலத்தில் ஆத்தா அனுமதித்தால்தான் ஆடவன் மனைவியுடன் பேசலாம். இந்தக் காலத்தில் மனைவி அனுமதித்தால் தான் ஆத்தாவுடன் பேசலாம்.

— பழ. தெ. லெ.

அருணாசலம் செட்டியார்

(3-8-90 அன்று பட்டினத்தடிகளின் திருவிழாவில்)

---

## மணி விழா

நாட்டரசன்கோட்டை திரு. கி. நா. கண நடராசன் செட்டியார் திருமதி ந. கிருஷ்ணவேணி ஆச்சியின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா 26-7-90 அன்று பிள்ளையார்பட்டியில் சிறப்பாக நடைபெற்றது விழாவில் மதுரைப் பெருமக்களும் சுற்றத்தார்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

---

## அரு. சோ. வின் கவிதை நூல் வெளியீட்டு விழா!

'பொற்கிழிக் கவிஞர்,' 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரனின் 55 ஆவது பிறந்த தின விழாவும் அவர் எழுதியுள்ள "கவிதை ஆற்றில்" என்ற நூலின் வெளியீட்டு விழாவும் 15-8-90 அன்று கோவிலூர் ஆதீனத்தில் உள்ள லட்சுமி பவனத்தில் சிறப்பாக நடைபெற்றது. கோயிலில் அபிடேக ஆராதனைக்குப் பிறகு நடைபெற்ற விழாவிற்கு கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞானதேசிக சுவாமிகள் தலைமை தாங்கி "கவிதை ஆற்றில்" நூலினை வெளியிட்டு ஆசி கூறினார்கள். திரு அழ அரு சோம. நாராயணன் செட்டியார் முதல் பிரதியினைப் பெற்று வாழ்த்தினார்கள். அந்நூல் பற்றி பலர் பாராட்டி விமர்சனம் செய்தனர். திருச்செந்தூர்ப் பாதயாத்திரைக் குழுவின் சார்பில் 'காசிஸ்ரீ' திரு. வயிரவன் செட்டியார் கவிஞருக்குப் பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார். திரு. அரு சோ. ஏற்புரை கூற திரு. சி. இராமசாமி நன்றி கூறினர்.

## சுழற்குழுவின் தலைவராக பி. எல். சொக்கலிங்கம்

புதுக்கோட்டை சுழற் குழுவின் தலைவராக வேகுப்பட்டியைச் சேர்ந்த திரு பிஎல் சொக்கலிங்கம் செட்டியார் பதவி ஏற்றுள்ளார்கள். இவர்களது துணைவியார் திருமதி மீனாட்சி ஆச்சி புதுக்கோட்டை இன்னர் வீல் சங்கத்தின் தலைவியாகப் பொறுப்பேற்றுள்ளார்கள்.

---

அடுத்த இதழில்...
செல்வி மாலதி
இராமநாதனின்
பேட்டி
வெளி வருகிறது!



எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்



காரைக்குடியைச் சேர்ந்த திரு. பிஎல். முருகப்பன் திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் முன்னாள் தலைவர். இவர் பாளையங்கோட்டை அரிமா சங்கத்தின் தலைவராகவும், வட்டாரத் தலைவராகவும் மாவட்டத் தலைவராகவும் சேவை செய்தவர். இவர் 1990-91 ஆம் ஆண்டுக்கு அரிமா மாவட்டத் துணை ஆளுநராகத் தேர்வு செய்யப் பெற்றுள்ளார்.



வேகுப்பட்டியைச் சேர்ந்த திரு. எஸ். சொக்கலிங்கம் செட்டியார் திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவர். இவர் பாளையங்கோட்டை அரிமா சங்கத்தில் சென்ற ஆண்டு தலைவராகச் சேவை செய்தவர். இவர் 1990-91 ஆம் ஆண்டுக்கு மாவட்டத் தலைவராகத் தேர்வு செய்யப் பெற்றுள்ளார்.

சண்முகநாதபுரத்தைச் சேர்ந்த திரு. அரு. அருணாசலம் 1990-91 ஆம் ஆண்டுக்கு பாளையங்கோட்டை அரிமா சங்கத்தின் தலைவராகத் தேர்வு செய்யப் பெற்றுள்ளார்.



பூலாங்குறிச்சியைச் சேர்ந்த திரு. அ. அருணாசலம் பாளையங்கோட்டை அரிமா சங்கத்தின் செயலாளராகத் தேர்வு செய்யப் பெற்றுள்ளார்.

திருநெல்வேலி நகரத்தார் சங்கம் தொடங்கப் படப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.



அனைவருக்கும் நமது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.